2010 ஏப்ரல் 6]

முற்பகல் 10-35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 18, மாண்புமிகு உறுப்பினர் திரு. து. அமரமூர்த்தி, மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

18—

தரம் உயர்த்துதல்

***59327—திரு. து. அமரமூர்த்தி:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெரம்பலூர்-மானாமதுரை சாலையில் பெரம்பலூரிலிருந்து தஞ்சாவூர் வரையுள்ள சாலையை தேசிய நெடுஞ்சாலையாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பெரம்பலூர்-மானாமதுரை சாலையில், பெரம்பலூரிலிருந்து தஞ்சாவூர் வரையுள்ள சாலை, தேசிய நெடுஞ்சாலையாகத் தரம் உயர்த்தப்பட்டு தேசிய நெடுஞ்சாலை எண் 226 விரிவாக்கம் என்று பெயரிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. து. அமரமூர்த்தி.

திரு. து. அமரமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரம்பலூரிலிருந்து தஞ்சாவூர் வரை மாநிலச் சாலையாக இருந்ததை தேசிய நெடுஞ்சாலையாக அறிவித்திருக்கிறார்கள். அதற்காக எங்களது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அறிவித்து ஓர் ஆண்டுக் காலம் ஆகியும், நிதி ஒதுக்கீடு வராததனால், பெரம்பலூர்-தஞ்சாவூர் சாலை போக்குவரத்துக்குத் தகுதியற்றதாகி மிகவும் பழுதடைந்துள்ளது. உடனடியாக மாநில அரசு அதற்குண்டான நிதியை ஒதுக்கி, பழுது நீக்கம் செய்ய முன்வருமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

TRUTH ALONE TRIUMPHS

[2010 ஏப்ரல் 6

அதிலும் குறிப்பாக, நமது மாண்புமிகு துணை முதல்வர் அவர்கள் அரியலூர் வருகை தந்தபோது பெரம்பலூர் முதல் அரியலூர் வரை சரி செய்து விட்டார்கள். அந்த அரியலூர் முதல் தஞ்சாவூர் வரை செல்கின்ற சாலை மிகவும் பழுதடைந்து போக்குவரத்துக்கே தகுதியற்றதாக இருக்கிறது. சமீபத்திலே எங்கள் பகுதிக்கு வருகைதந்த மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு இதைக் கொண்டு சென்றோம். அவர்களும் உடனடியாக அதிகாரிகளைத் தொடர்பு கொண்டார்கள். இருந்தாலும், இன்னும் பழுது நீக்கம் செய்யப்படவில்லை. உடனடியாக அந்தச் சாலைக்கு உரிய நிதியை ஒதுக்கி பழுது நீக்கம் செய்து போக்குவரத்துக்குத் தகுதியுள்ள சாலையாக மாற்ற அரசு முன்வருமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே தஞ்சாவூரிலிருந்து மானாமதுரை வரை மாநில நெடுஞ்சாலையாக இருந்து தேசிய நெடுஞ்சாலையாக ஒரு சில ஆண்டுகளுக்கு முன்பு அது தரம் உயர்த்தப்பட்டது; வகைப்பாடு மாற்றப்பட்டது. அதிலே விடுபட்டிருந்த பெரம்பலூரிலிருந்து தஞ்சாவூர் வரையிலான சாலை, சுமார் 76 கிலோ மீட்டர் நீளம்தான் பாக்கி இருந்தது. அதையும் மத்திய அரசால் தேசிய நெடுஞ்சாலையாக வகைப்பாடு செய்யப்பட்டு மாற்றம் செய்யப்பட்டிருக்கிறது. எனவே, மாநில அரசால் அதற்கு எந்தவிதமான நிதியும் ஒதுக்க முடியாது. தேசிய நெடுஞ்சாலைகளைப் பொறுத்த அளவில், மத்திய அரசினுடைய நிதியைப் பெற்று மாநில அரசால் பராமரிக்கப்படக்கூடிய சாலை சுமார் 1,613 கிலோ மீட்டர். அந்தச் சாலையில் இதுவும் அமைந்திருக்கிறது. எனவே, நிதி தேவையானால் பரிந்துரை செய்து மத்திய அரசை வலியுறுத்தி அந்தச் சாலை பராமரிக்கப்படும். கடந்த மாதம் பெரம்பலூர், அரியலூர் மாவட்டங்களினுடைய ஆய்வுக் கூட்டத்திலே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதனைக் குறிப்பிட்டார்கள். அப்பொழுது அதுகுறித்து உரிய அலுவலர்களுக்கு தொடர் நடவடிக்கை எடுக்க அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. எனவே, நல்ல முறையில் பயன்பாட்டிற்கு வரக்கூடிய வகையிலே விரைவில் அந்தச் சாலையைப் பராமரிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

2010 ஏப்ரல் 6]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. து. அமரமூர்த்தி.

திரு. து. அமரமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களின் பதிலுக்கு நன்றி. கிராமப்புறச் சாலைகளின் குறுக்கே ஓடுகின்ற ஆறுகளால், ஓடைகளால் மழைக் காலங்களில் பல்வேறு கிராமங்கள், பல நாட்கள், பல மாதங்கள் துண்டிக்கப்படுகின்ற நிலைகள் ஏற்படுகின்றன. ஆகவே, கிராமப்புறச் சாலைகளிலுள்ள ஓடைகளின், ஆறுகளின் குறுக்கே நெடுஞ்சாலைத் துறைமூலம் பாலம் கட்ட அரசு முன்வருமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன். அப்படியென்றால், எங்கள் அரியலூர் தொகுதியில், அரியலூர்-சுண்டக்குடி சாலையில் அம்பலவர்கட்டளை-சுண்டக்குடி சாலையிலே மருதையாற்றின் குறுக்கே மேம்பாலம் கட்டுவதற்கும் தா.பழவூர் ஒன்றியத்தையும், திருமானூர் ஒன்றியத்தையும் இணைக்கின்ற வைப்பூர்-முட்டுவாஞ்சேரி இடையே ஒரு பாலத்தையும் ஆதனூர் மழவராயநல்லூர் குறுக்கே ஒரு பாலத்தையும் நெடுஞ்சாலைத் துறைமூலமாகக் கட்டுவதற்கும் அரசு முன்வருமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியச் சாலையைப் பொறுத்த அளவில் நேரடியாக மாநில அரசு நெடுஞ்சாலைத் துறைக்கு ஒதுக்குகிற நிதியிலிருந்து செலவு செய்ய இயலாது, தணிக்கைப் பிரச்சினை வருகின்ற காரணத்தால். அதுபோன்ற உயர்மட்டப் பாலங்கள் தேவைப்படுகின்ற இடங்களில் நபார்டு வங்கியினுடைய அனுமதியைப் பெற்று, மாநில அரசின் பங்குத் தொகையைச் செலுத்தி பாலம் கட்டப்படுகிறது. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற பாலங்கள் போல அவருடைய மாவட்டத்திலும் சரி, அவருடைய தொகுதியிலும் சரி, பாலங்கள் தேவைப்படுமானால் அதுகுறித்து ஆய்வு செய்து மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய ஒப்புதலைப் பெற்று, நபார்டு வங்கியின் கடன் உதவியைப் பெற்று எதிர்காலத்திலே பாலங்கள் கட்டுவதற்கு அரசு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. முருகவேல்.

[2010 ஏப்ரல் 6

திரு. கே. முருகவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சாவூர்-சாயல்குடி மாநில நெடுஞ்சாலை எண் 29-ல் கடந்த நிதி ஆண்டில் முதுகுளத்தூர் புறவழிச் சாலை அமைக்க அறிவிக்கப்பட்டு ரூ.10 கோடி நிதி ஒதுக்கப்பட்டது. ஆனால், அந்தப் பணி இன்னும் தொடங்கப்படவில்லை. எனவே, முதுகுளத்தூர் புறவழிச் சாலைப் பணி எப்பொழுது தொடங்கப்பட்டு, எப்பொழுது முடிக்கப்படும் என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய தொகுதியிலே முதுகுளத்தூருக்குப் புறவழிச் சாலை வேண்டுமென்று கடந்த ஆண்டே பலமுறை வலியுறுத்தினார்கள். ஏறத்தாழ 10, 15 சாலைகள் புறவழிச் சாலைகளாக அமைப்பதற்கு எடுக்கப்பட்ட திட்டத்தில் முதுகுளத்தூருக்கான புறவழிச் சாலையும் ஒன்று. நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய அனுமதியும் கிடைக்கப்பெற்று, இந்த நிதி ஆண்டிலேயே அந்தப் புறவழிச் சாலை அமைப்பதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்கும்.

முற்பகல் 10-40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 19, மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சந்திரகாசி, மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

19—

சமுதாயக் கூடம்

***49611—திரு. மா. சந்திரகாசி:**

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரம்பலூர் மாவட்டம், குன்னம் வட்டம், வடக்கலூர் ஆதி திராவிடர் குடியிருப்புப் பகுதியில் சமுதாயக் கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?